இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர் .

**OS NO. 68/2019**

**2022** ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் **22** ஆம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு/பிரதிவாதி சாட்சியாகிய வாசா.2 வாக்குமூலம், ( **1969** ம் ஆண்டின் **54**-வது விதியின் **95** வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.ஏ.கெஜபிரியா, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சிங்காரவேலு | வயது | : |
| த.பெ./க.பெ. | : கோவிந்தன் | தொழில் | : |
| ஊர் | : | சமயம் | : |
| வட்டம் | : | ஜாதி | : |
| மாவட்டம் | : | | |

**முதல் விசாரணை**

எனக்கு சாட்சி சொன்வதற்காக நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. அந்த அழைப்பாணை தான் வா.சா.ஆ.16. இந்த வழக்கின் வாதி முருகேசனை எனக்கு தெரியாது. அவரை பிரதிவாதிகள் தான் எனக்கு அறிமுகப்படுத்தினார்கள். பிரதிவாதிகள் என் வீட்டிற்குஎதிரில் குடியிருக்கிறார்கள். நாங்கள் குடியிருப்பது பிள்ளையார் கோவில் தெரு, குறுங்குளம் தஞ்சாவூர் தாலுக்கா. எதற்காக முருகேசனை எனக்கு அறிமுகப்படுத்தினார்கள் என்றால் பிரதிவாதிகள் முருகேசனிடம் பணம் கேட்டு இருக்கிறார்கள். பணம் வா'ங்குவதற்கு சாட்சிக்காக என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். 29.08.2018 ம் தேதி காலை 11.00 மணியளவில் பிரதிவாதிகள் என்னை வீரமுண்டான் குடிக்காட்டிற்கு அழைத்து சென்றார்கள். வாதி வீரமுண்டான் குடிக்காட்டில் தான் வசிக்கிறார். நாங்கள் அங்கு 1 மணிநேரம் காத்திருந்தோம். வாதி மூக்கப்பன் உடையான் பள்ளத்திற்கு வரசொன்னார். பணம் கொடுப்பதற்காக வரச்சொன்னார். எழுதுபவரையும், சாட்சியையும் பிரதிவாதிகள் அழைத்து வரவில்லை என்பதற்காக மூக்கப்பன் பள்ளத்திற்கு வரச்சொன்னார். நான் பிரதிவாதிகளுடன் மூக்கப்பன் உடையான் பள்ளத்திற்கு போனோம். அங்கு ராஜா என்பவரும் எழுதியவர் வைரவேலு என்பவரும் வந்தார்கள். அதற்கு முன்பே வாதி ரூ.12,00,000/- பணத்தை கொடுத்துவிட்டார். அதன் பிறகு புரோ நோட்டு எழுதினார்கள். என்னிடம் காட்டப்படும் புரோ நோட்டில் உள்ள முதலாவது

கையெழுத்து என்னுடைதுதான். அந்த புரோ நோட்டு ஏற்கனவே வாசாஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டது. ஸ்டாம்பில் கோவிந்தராஜன், சதானந்த பதியும் கையெழுத்து போட்டார்கள். அவ்வாறு கையெழுத்து போடும் போது நானும், எழுதியவரும் சாட்சி ராஜாவும் உடன் இருந்தோம் எங்கள் முன்னிலையில் போட்டார்கள். புரோநோட்டு ரூ.12,00,000/- த்திற்கு எழுதிக்கொடுத்தார்கள். வாதியிடம் வாங்கிய கடன் தொகையை பிரதிவாதிகள் கொடுக்கவில்லை போல் இருக்கிறது. அதனால் தான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. மேற்படி விபரங்கள் அனைத்தும் நேரடியாக தெரியும். பிரதிவாதிகள் வட்டிக்கு வாங்கினார்களா கைமாற்றாக வாங்கினார்களா என்று எனக்கு தெரியாது.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

(ஒம்/-A.மலர்விழி)

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.